[1969 மார்ச் 26

பூச்சி கொல்லி மருந்துகளுக்கு உதவித் தொகை

*** 474—வின திரு. கே. போஜன் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விவசாயப் பயிர்களுக்குத் தெளிக்கும் பூச்சி மருந்துகளுக்காக மத்திய அரசு நம் மாநில அரசுக்கு ஏதேனும் உதவித்தொகை அளிக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) பூச்சி மருந்துகள் அவற்றின் விலையில் 65 சதவிகிதப்படி உழவர்களுக்கு விற்கப்படுகின்றன. எஞ்சிய 35 சதவிகித விலையில் பாதியை மத்திய அரசும், பாதியை மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து அளிக்கின்றன.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 65 சதவீதம் மத்திய அரசு மானியம் தருவதாகக் கூறினார்கள். . . .

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பூச்சி மருந்துகள் விலையில் 65 சதவிகிதம் உழவர்களுக்கு விற்கப்படுகின்றன. எஞ்சிய 35 சதவிகித விலையில் பாதியை மத்திய அரசும் பாதியை மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்ளுகின்றன.

மதுராந்தகம் நகருக்குப் புதைச் சாக்கடை

*** 475—வினா : திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

மதுராந்தகம் நகரத்திற்குப் பாதாளச் சாக்கடை தேவையென்ற கோரிக்கையின் மீது சர்க்கார் நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மார்ச் 1967-ல் மதுராந்தகத்துக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் தேவையென்ற கோரிக்கை அந்தப் பஞ்சாயத்திடமிருந்து வந்தது அரசின் தற்போதைய நிதிப் பற்றாக்குறையினால் இத்திட்டத்தை அரசினால் எடுத்துக்கொள்ள இயலாது என்று அறிவிக்கப்பட்டது.

திரு. கொளத் நூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, பாதாள சாக்கடை அமைக்கவேண்டுமானால் அதற்கு வேண்டிய நிலைமைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பஞ்சாயத்தின் எல்லைக்குட்பட்ட இடங்களில் பஞ்சாயத்துக்களே பாதாள சாக்கடை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். எனவே, மதுராந்தகம் பஞ்சாயத்தாக இருக்கிற காரணத்தினால் அரசாங்கம் அதை ஏற்று நடத்துவதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

படிப்பு உதவித் தொகைகள்

***476 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களுக்கு வழங்கும் உபகாரச் சம்பளம் எந்த மாதத்தில் வழங்கப்படுகிறது ?